UNIVERSITY OF SRI LANKA LIBRARY
RECEIVED 1979-9-01
PERIODICALS DIVISION

**துரித மீட்டல் வகுப்புகள்**

G. C. E. new O/L வகுப்புகள்
(1979 டிசம்பர் பரீட்சை)

விசேட ஆங்கில வகுப்புகள்
**ஆரம்பம் 1-9-79**

கல்வி போதனநிலையம்
34, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.

லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
## The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 16 ஷவ்வா 8 இதழ் 201
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-9-79

### ஹிதயத்துல்லா பதவி ஏற்றார்

புதுடில்லி, ஆக 31

இந்தியாவின் 6வது உப ஜனாதிபதியாக ஜனாப் முகமத் ஹிதாயத்துல்லா, இன்று ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவ ரெட்டி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்திற்குப் பிரதமர் திரு. சரண்சிங் உட்படச் சகல அமைச்சர்களும் சபாநாயகர் திரு. கெகடே மற்றும் படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர். (இ)

| உணவு முத்திரை திட்டம் | மண்ணெண்ணெ விலை உயர்வு | சம்பள உயர்வு |
|---|---|---|

# இன்று முதல் அமுலுக்கு வருகிறது!

# மண்ணெண்ணெ ரூ. 10-68
# விசேட படி ரூ. 55-00

(கொழும்பு)

**உணவு முத்திரைத் திட்டம் இன்று முதல் அமுலுக்கு வரும் அதேநேரத்தில் மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பதோடு, சம்பள உயர்வும் வழங்கப்படுகிறது.**

300 ரூபாவுக்குக் குறைந்த வருமானம்பெறும் சகலருக்கும் இன்றுமுதல் உணவு முத்திரைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன

இந்த நாட்டில் 75 லட்சம் மக்கள் பயனடையப்போகும் இத்திட்டத்தின் கீழ் அரிசி, நெல், மா, கருவாடு, சீனி, பால்மா, பாண், பருப்பு, கட்டிப்பால் ஆகிய பொருட்களை இலவசமாக அரசு வழங்கும்.

மண்ணெண்ணெய்க்குப் புறம்பான முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மண்ணெண்ணெ விலை உயர்வு

மண்ணெண்ணெயின் விலையை 10 ரூபா 68 சதமாக அதிகரிப்பதென்றும் அரசு முடிவு செய்துள்ளது இப்புதிய விலை அதிகரிப்பு இன்று முதல் அமுலுக்கு வருகிறது

மண்ணெண்ணெ விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அரசுக்கு 2 ரூபா 68 சதம் நஷ்டமேற்படுவதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது

### அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு

நிதி, திட்டமிடல் அமைச்சரின் சிபார்சின்பேரில் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இம்மாதம் முதல் 55 ரூபா சம்பள உயர்வு வழங்குவதென்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1,500 ரூபாவுக்கு குறைந்த சம்பளம் பெறுபவர்களுக்கே இச்சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விதவைகள், அநாதைகள் உட்படச் சகல ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் 55 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும்

### நாட் சம்பள ஊழியருக்கு

நாட்சம்பள ஊழியருக்கு நாளாந்தம் 2 ரூபா 50 சதம் விதம் 55 ரூபாவுக்கு மேற்படாமல் சம்பள உயர்வு வழங்கப்படும்.

### கணவன்-மனைவிக்கு ...

கணவனும் மனைவியும் அரசாங்க ஊழியர்களாக இருந்தால் அவர்களின் இருவருக்குமா இன்றி ஒருவருக்கே சம்பள உயர்வு வழங்குவதென்பது குறித்து இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை என்றும் திரு ரொனி டி மெல் தெரிவித்தார்.

### கூட்டுத்தாபன, தனியார் துறையினருக்கு

அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இச்சம்பள உயர்வு வழங்கப்படுமென அரசு எதிர்பார்க்கிறதெனினும் இவர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவதை உறுதிப்படுத்தும்பொருட்டுத் தேவையான சட்ட மூலங்களை உடன் நிறைவேற்றுமாறு தொழிலமைச்சரை அரசு பணித்துள்ளதென்றும் திரு மெல் கூறினர்.

### உணவு முத்திரை உள்ளவர்க்கும்

இதுவரை 300 ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெற்று, உணவு முத்திரை கிடைக்கப் பெற்ற சகலருக்கும் இச்சம்பள உயர்வு வழங்கப்படும். இச்சம்பள உயர்விலும் 300 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெற்றாலும் உணவு முத்திரை தொடர்ந்து வழங்கப்படுமென்றும் நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல் கூறினர். (ம-இ)

# இலங்கைவிமானசேவையின் புதிய அத்தியாயம்
## 'எயர் லங்கா' இன்று சேவையை ஆரம்பிக்கிறது

(கொழும்பு)

இலங்கை விமானச் சேவையில் இன்று புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது.

இலங்கையின் புதிய விமான சேவையாகிய 'எயர் லங்கா' இன்று முதல் உலக நாடுகளுக்கு விமானங்களை சேவையில் ஈடுபடுத்துகிறது.

"எயர் லங்கா" வின் சேவை இன்று ஆரம்பமாவதுடன், 30 ஆண்டு காலமாகச் சேவையாற்றி வந்த 'எயர் சிலோன்' விமான சேவையின் வரலாறு முற்றுப்பெறுகிறது

"எயர் லங்கா" வின் முதலாவது விமானச் சேவை இன்று கட்டுநாயக்காவிலிருந்து பாங்கொக் செல்கிறது

அண்மையில் சிங்கப்பூரில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட "போயிங் 707" விமானம் ஒரு வாரத்தில் வெளிநாட்டுச்சேவைகளில் ஈடுபடும்

'எயர் லங்கா' வாராந்தம் சென்னைக்கு 4 சேவைகளையும் சிங்கப்பூருக்கு 3 சேவைகளையும் பம்பாய், பாஹ்றின், பிராங்பேட், லண்டன், பாங்கொக் ஆகிய இடங்களுக்கு தலா இரு சேவைகளையும், கோலாலம்பூருக்கு ஒரு சேவையையும் நடத்தும்.

'எயர் லங்கா' அக்டோபரில் தனது இரண்டாவது போயிங் விமானத்தைக் கொள்வனவு செய்யும். (இ)

இ. போ. ச.

### வட பிராந்திய புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்து சபையின் புதிய தலைவராக திரு டட்லி குணசேகரவை, போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச் முகமது நியமித்துள்ளார்

இதுவரை திரு கே அமரசிங்கம் வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவராகக் கடமையாற்றினர். (க)

### கைத்தொழில் பயிற்சி நிலையம்

(ஊர்காவற்றுறை)

பருத்தியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தினரின் கைத்தொழில் பயிற்சி நிலையத்தை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சடாட்சரசண்முகதாஸ் அண்மையில் திறந்துவைத்தார். இப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பத்தில் 15 மகளிர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (கு)

## கம்பூச்சியா விவகாரம்: வெளியுறவு மந்திரிகள் வாக்குவாதம் இழுபறி நீடிக்கிறது

ஹவானா, ஆக. 31

ஹவானாவில் இன்று ஆரம்பமான அணிசேரா இயக்க நாடுகளின் வெளிநாட்டமைச்சர் கூட்டத்தில் கம்பூச்சிய பிரதிநிதித்துவ விவகாரத்தில் பல வெளிநாட்டு அமைச்சர்களுக்கிடையில் பலத்த வாக்குவாதம் இடம் பெற்றது.

இவ்விவகாரத்தில் அமைச்சர் எதுவித தீர்வுக்கும் வராததை அடுத்து கம்பூச்சியாவுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனத்தை காலியாக விடலாம் என ஹவானா வெளிநாட்டமைச்சர் தீர்ப்புக்கூறினர்.

இவ்விஷயத்தில் தீர்ப்புக்கூற கியூபாவுக்கு உரிமையில்லை என மலேஷியாவும் வேறு சில நாடுகளும் கூறின.

### லக்ஸ்பிறே விலையுயர்வு

(கொழும்பு)

லக்ஸ்பிறே பால்மாவின் விலை இன்று முதல் இறாத்தல் ஒன்றுக்கு ஆறுரூபா ஐம்பது சதத்திலிருந்து எட்டு ரூபா ஐம்பது சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகவலை வர்த்தக கப்பல் துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. அத்துலத்முதலி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ம)

# இ. காங். அ தி மு க தேர்தல் உறவுக்கு இந்திராகாந்தி நிபந்தனை
## 'சரண்' மந்திரிசபையிலிருந்து பாலா, சத்தியவாணி வெளியேறவேண்டுமாம்

சென்னை, ஆக 31

இந்திய இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு எம். ஜி. ஆரின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குமிடையே தேர்தல் உடன்பாடு ஏற்பட வேண்டுமானால் திரு சரண்சிங்கின் அமைச்சரவையிலிருந்து திரு. பாலபழனூரும் திருமதி சத்தியவாணி முத்துவும் வெளியேற வேண்டுமென திருமதி இந்திரா காந்தி நிபந்தனை விதித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் தமிழக அரசின் விசேட பிரதிநிதி திரு ராஜாராம் இந்திரா காங்கிரஸ்-அ தி மு க தேர்தல் உடன்பாடு குறித்து திருமதி இந்திரா காந்தியை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இது இல்லாதிருக்க அ தி மு க வின் எதிர்கால நிலை குறித்து ஆராய செப்டம்பர் மாதம் 4ம் திகதி சட்டசபை உறுப்பினர்கள் அமைச்சர்கள், முன்னுள் எம் பிக்கள் கொண்ட கூட்டம் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் அழைத்துள்ளார். (இ)

## கைதடி சைவ அநாதை இல்லத்தில்

# நாளை ஆரம்பமாகும் அறவழி, அஹிம்சைவழி பயிற்சி வகுப்புகள்

### இரண்டு வாரங்கள் நடைபெறும்

[மட்டுவில்]

அறவழி, அஹிம்சைவழிப் பயிற்சியை இலங்கை மக்களுக்கும் போதிப்பதற்கு அமெரிக்கா, தமிழ்நாடு கோவைமாவட்டம், புதுடில்லி ஆகிய பகுதிகளிலிருந்து முதிர்ந்த அனுபவசாலிகளும் தொண்டர்களும் இலங்கை வந்துள்ளனர். கைதடி சைவ அநாதை இல்லத்தில் நாளை 2ம் திகதி பயிற்சிகள் ஆரம்பமாகும்.

2ம் திகதி பேராசிரியர் குதேசையா தலைமையில் கைதடியில் ஆரம்பமாகும் இப்பயிற்சி வகுப்பில் ஆரம்பத்தில் இலங்கையைச் சேர்ந்த 100 பயிற்சியாளர்கள் கலந்துகொள்ளுகிறார்கள். சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடனும், தந்தை செல்வா அறங்காவற்குழுவுடனும் இணைந்து இப்பயிற்சி வகுப்பை நடத்துகிறது.

தொடர்ந்து இரண்டுவாரங்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த காந்திய அஹிம்சை வழியில் இயங்கிக்கொண்டிருக்கும் சர்வதேச அறவழிவாழ்வு ஸ்தாபனப் பிரமுகர்களான திரு ஜோர்ஜ் லிலபீ, திருமதி லிலியன் லிலபீ, தமிழ்நாடு கோவைமாவட்ட சர்வோதய செயலாளர் திருஎன்ரி இராமச்சந்திரன், புதுடில்லி காந்திசமாதான ஸ்தாபனத்தைச்சேர்ந்த ஸ்ரீ சித்தரர்த்தா ராஜநாதா, உள்நாட்டுப் பிரமுகர்களான புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திரு க திருநாவுக்கரசு, காந்திய திரு எஸ் கே தம்பிப்பிள்ளை, பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு கே சி நித்தியானந்தா, கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை, அரசட்சிரு ஜெ சச்சிதானந்தர், அருட்திரு எ சி தம்பிராசா ஆகியோரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

இந்த ஆரம்பநாள் நிகழ்ச்சிக்கு யாழ் மாநகர பிதா திரு இராஜா விசுவநாதன், எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்; பருத்தித்துறை மாவட்டநீதிபதிகளான திரு கே பாலகிட்ணர், திரு ஜே ஏ ஆசீர்வாதம், திரு க ஞானச்சந்திரன் ஆகியோருட்பட பல பிரமுகர்களும் பங்குபற்றுவார்கள்.

---

### அளவெட்டி தம்பளாவத்தை ஸ்ரீ நாகதம்பிரான் கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி தம்பளாவத்தை ஸ்ரீ நாகதம்பிரான் கோவில் கும்பாபிஷேகம் இம்மாதம் 3-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

வண்ணை சிவ. ஐ கைலாசக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்துவார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் 'தூது சென்ற மாதவன்' என்னும் பொருள்பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

---

### மக்கள் கருத்து

## நீண்டதூர பஸ் நிலையத்தின் குறைகள்

யாழ் மாநகரசபையால் அண்மையில் அமைக்கப்பெற்று மத்திய பஸ் நிலையத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட யாழ் முற்றவெளியிலுள்ள நீண்டதூர பஸ்பிரயாணிகளுக்கான பஸ்நிலையம் தற்போது ஒரு சீர்கேடான அநாதரவான, வசதியற்ற நிலையில் இருக்கிறது.

பஸ் பிரயாணிகள் நெடுந்தூர பிரயாண பஸ்களுக்கு மூன்று நான்கு மணிநேரம் நின்ற நிலையில் ஆசன வசதியின்றி இயூவரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

முற்றவெளியிலுள்ள அடைப்பற்ற திறந்த வெளியில் மேற்குறிப்பிட்ட நிலையம் அமைந்திருப்பதால் காற்றுக்கும், காற்றினால் அடிக்கும் மண், மழைத்தூவானம்குளிர் ஆகியவற்றிற்கும் ஆளாக வேண்டிய சுகாதார வசதியற்ற நிலைமை, மலசலகூடம் கிட்டிய தூரத்தில் இல்லாது மீன் சந்தைக்குரிய தூரத்திலுள்ள மலசல கூடத்திற்குப் போகும் போது பஸ் கியூவை முறிப்பதுடன் காத்திருந்த பஸ்ஸையும் இழக்கும் பரிதாபநிலை; போதியளவு மின்சார வசதியின்மையால் முடிக்கு மாறிகள், காடையரின் அட்டகாசத்திற்கு உள்ளாகுதலால் பெண்கள் பெரும்பாலும் அந்நிலையத்தில் தனித்துவதற்கு அஞ்சுதல் போன்ற பல குறைகள் அங்கு இருக்கின்றன.

மத்திய பஸ் நிலையத்திற்கும் நீண்டதூர பஸ்நிலையத்திற்கும் பஸ்தொடர்பு இல்லாதிருப்பதால் குழந்தைகளுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் வரும் பிரயாணிகள் அவஸ்தைப்படுவதுடன் நேர அட்டவணை தெரியாத நீண்டதூர பஸ்தரிப்பில் காத்திருக்கும் பிரயாணிகள் நேர அட்டவணையாளர்களை காணமுடியாதும் இருக்கிறது. மத்திய பஸ்நிலையத்திற்கு வந்து சேரும் அதிகாலை பஸ்களாவது நெடுந்தூர பஸ் நிலையத்திற்கு வந்து போகுதல் பிரயாணிகளுக்கு பெரிதும் உதவியாகவும் வசதியாகவும் இருக்கும்.

இவற்றை மாவட்ட அமைச்சர், மாநகரசபை முதல்வர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள்கவனத்தில் கொண்டு பிரயாணிகளின் வசதிக்கேற்ப ஆவன செய்து கொடுப்பார்களென நம்புகிறேன்.

அ. இராமலிங்கம்
புகையிரதநிலைய வீதி
மல்லாகம்

---

யாழ். மாநகரசபையின்

## வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை எல்லைக்குள் மழைகாலத்தில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை கட்டுக்குள் பாய்ச்சுவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக மாநகரசபை எல்லைக்குள் உள்ள சுமார் 32 குளங்களைக் குழு ஒன்று நேற்று முன்தினம் பார்வையிட்டது.

யாழ் மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் ஆணையாளர் கே சிவஞானம் கட்டடநிபுணர் திரு டேவிட் மற்றும் தொழில்நுட்ப சுகாதார, வேலைப்பகுதி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

இதுசம்பந்தமாக நடைபெற்ற மகாநாட்டில் யாழ் மாநகர முதல்வர் இராசா விசுவநாதன்; ஆணையாளர் கே சிவஞானம், அரசாங்க பொறியியல் நிபுணர் திரு டேவிட், பதில்சுகாதார அதிகாரி பத்மநாதன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இம்மகாநாட்டில் மாநகர அபிவிருத்தித்திட்டங்கள்பற்றி ஆராயப்பட்டு நீண்டதிட்டம், குறுகியகாலத் திட்டம் என்று இரண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

பதில் சுகாதார வைத்திய அதிகாரி திரு பத்மநாதன் கருத்துத்தெரிவிக்கையில், யாழ் மாநகரசபை எல்லைக்குள் 32 குளங்கள் இருப்பதாகநீர்வளப் பொறியியலாளர் தெரிவித்திருப்பதாகவும், கந்தோரில் உள்ள நிலஅளவைப் படத்தில் குளங்கள் இருக்கும் இடங்கள் குறிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

குறுகியகாலத் திட்டத்தின் கீழ் வடிகால் அமைத்தல், வடிகால்களைத் திருத்தி அமைத்தல், குளங்களை ஆழமாக்குதல் ஆகிய வேலைகளை மாரிகாலத்திற்கு முன்னர் செய்து முடிப்பதாக மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

குளங்களிலும் வடிகால்களிலும் குப்பைகள் கொட்டுவது தடுக்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்துநேற்று காலை எட்டுமணி முதல் மாலை நான்குமணி வரை இக்குழுவினர் குளங்களைப் பார்வையிட்டனர். ஒவ்வொரு குளத்திற்கும் இக்குழுவினர் சென்றபோது அந்தந்த வட்டார உறுப்பினர்கள் குழுவினரை வரவேற்று குளத்திற்கு அழைத்துச்சென்றனர்.

குழுவில் சென்ற நிபுணர் டேவிட் மற்றும் உத்தியோகத்தர்கள் குளங்கள்பற்றிய விபரங்கள் குறித்து கலந்து ஆலோசனை நடத்தினர்.

தேவரிகுளம், பாணன்குளம், மற்றும் பகுதிகளில் தேங்கிநிற்கும் வெள்ளத்தைப் பாய்ச்சுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. விரைவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவிருக்கிறது. [கொ]

---

## சிறுவர்தின விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். சென். ஜோக் சனசமூக நிலைய சிறுவர்தின விழாவும், ஆண்டு விழாவும் இன்றும் நாளையும் நிலைய மைதானத்தில் நடைபெறுகிறது.

இன்று காலை பத்துமணிக்கு, ஐந்து மைல் சைக்கிளோட்டப் போட்டியும் ஞாயிற்றுக்கிழமை சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும், விநோத உடை, சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர மேயர் திரு. இ. விசுவநாதன், உதவி மேயர் பி. எவ் சேவியர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இரண்டு தினமும் நிலைய இரவுப் பாடசாலை, பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், "அக்கினிசாட்சி", மகுடம், அடங்காப்பிடாரி ஆகிய நாடகங்களும் இடம் பெறும். (செ-கு)

---

## வெள்ளோட்ட விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிநாயகர் தேவஸ்தான புதிய ரத வெள்ளோட்ட விழா இம்மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. [கு]

---

## தனிநாடு கோரிக்கையை எதிர்த்துப்போராடுவராம்

[யாழ்ப்பாணம்]

"தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபின் அதற்கு எதிராக முகங்கொடுக்கப் பயந்த பலர் எமது இயக்கத்திலிருந்து பிரிந்துசென்றனர். அதனால் எமது இயக்கத்தை திறம்பட நடாத்தமுடியாமல் போய்விட்டது"

யாழ் நிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கக்கூட்டத்தில் இயக்கத்தலைவர் திரு. எஸ். ரி. என் நாகரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டபோதெல்லாம் எமது இயக்கம் அப்பிரச்சினைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து வெற்றியும் கண்டுள்ளது.

எமது போராட்டத்தைத் தடுப்பதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமையைக்குலைப்பதற்கும், தொடர்ந்தும் எம் இனத்தை அடிமை குடிமைகளாக வைத்திருப்பதற்கும் சிலர் விரும்புகின்றனர்.

நாம் தனிநாட்டுக் கோரிக்கையைப் பலமாக எதிர்க்கின்றோம்.

எமது இயக்கத்தைச்சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களையும் சிலர் தவறான பாதையில் இழுத்துச்செல்ல விரும்புகின்றனர். நாம் அதை ஏற்கப்போவதில்லை எமது இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி தனிநாட்டுக்கு எதிரான பெரிய அளவிலான ஒருபோராட்டத்தை நடத்தவுள்ளது.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம்1964 அக்டோபர் 21ந்திகதி ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் அக்டோபர் 21-ம் ஒடுக்கப்பட்ட மக்களின் மாநாட்டைக்கூட்டவிருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சிச்செயலாளர் திரு சண்முகதாசனை நாம் சந்தித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமைதான் அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றார். அதனால்தான் ஒடுக்கப்பட்ட மக்களின் சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து பலம்பொருந்திய முன்னணியாக்கவிரும்புகிறோம் என்று கூறினார்.

திரு டானியல் உட்பட மற்றும் பலரும் பேசினர். (கொ)

---

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 16ம் திகதி
சனிக்கிழமை
[1-9-1979]

**மேடம்:** எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்கு இருக்கும்.

**இடபம்:** எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர், ஏக்கத்தின் சாயல் உண்டு, ஆத்திரத்தை அடக்கினால் அமைதிக்கு இடமுண்டு.

**மிதுனம்:** இதயத்தில் இனிமை தங்கும், பகைவர்கள் பணிவர், பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொது மக்களின் பாராட்டும் கிடைக்கும்.

**கடகம்:** அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள், அடக்கம் வேண்டும்.

**சிங்கம்:** தன்மான மிகுதிக்கும் தனவரவிற்கும் இடமுண்டு, சிலருக்கு வாகன சுகமும் உண்டு, குடும்பத்தில் தென்றல் வீசும், கல்வியில் முன்னேற்றமுண்டு.

**கன்னி:** தொழில்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**துலாம்:** இரக்க சிந்தை மேவிடும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள், கண்ணியமான தினம்.

**விருட்சம்:** பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும், சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம், உணவு விஷயத்தில் கவனம் வேண்டும்.

**தனு:** மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்த ஏமாற்றம் விளையும், இளைய சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**மகரம்:** இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும், இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும், தானிய விருத்திக்கும் இடம் உண்டு.

**கும்பம்:** தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்பு வேலை நடக்கும், கவனம் செலுத்தவும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையை பேணி நடக்கவும்.

**மீனம்:** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# அணுசக்தி ஆலையை பாகிஸ்தான் எப்படியும் அமைத்தே தீரும்!

## ஜெனரல் ஸியா அறிவிப்பு

(ராவல்பிண்டி)

"அணுசக்தி ஆலையை பாகிஸ்தான் அமைத்தே தீரும். இதனை எந்தச் சக்தியினாலும் தடுத்துவிட முடியாது" என்று பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

வானொலிப்பேட்டி ஒன்றிலேயே ஜெனரல் ஸியா உல் ஹக் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

அணுஆயுத தயாரிப்புகளை பாகிஸ்தான் எப்படியும் பெற்றே தீரும் என்று தெரிவித்த ஜெனரல் ஸியாவுல் ஹக், 'அணுசக்தி ஆலையைப் பாகிஸ்தானில் அமைக்கப் பிரான்ஸ் சிலவேளை தனது ஒப்பந்தத்தை விலக்கிக்கொள்ளலாம். இதுகுறித்து பாகிஸ்தான் கவலைப்படமாட்டாது' என்று கூறியுள்ளார்.

அணுசக்தி ஆலை அமைக்க ஏதோ ஒருநாடு பாகிஸ்தானுக்கு உதவுமென்று மறைமுகமாகக் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி, அது எந்தநாடு என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

## பூட்டோ கட்சிக்கு தடைவரலாம்

[ராவல்பிண்டி]

பூட்டோவின், பாகிஸ்தான் மக்கள் கட்சி தடைசெய்யப் படலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலை முன்னிட்டு, பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் மேற்கொண்டுள்ளார்.

வெளிநாட்டு உதவிகளைப் பெறும் அரசியல் கட்சிகள் தடைசெய்யப்படும் என்று ஜெனரல் ஸியா அறிவித்திருப்பதைத் தொடர்ந்தே அரசியல் நோக்கர்கள் மேற்படி அச்சத்தை தெரிவித்துள்ளனர்.

### பாகிஸ்தான்

## அணுகுண்டு வெடித்தால் பாரதம் மறுபரிசீலனை

### பாதுகாப்பு அமைச்சர் கருத்து

[ஹைதராபாத்]

பாகிஸ்தான் அணுகுண்டை வெடித்தால், பாரதம் தனது முடிவை மறுபரிசீலனைசெய்யும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.சி.எஸ். சுப்பிரமணியம் கருத்துவெளியிட்டுள்ளார்.

இங்குவிஜயம்செய்த அமைச்சர் சி. சுப்பிரமணியம், நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், பாரதத்தின் நிலைபற்றி விளக்கிக்கூறினார்:

"அணுஆயுதங்கள் சம்பந்தமாக பாரதம் ஒரு நிலையான கொள்கையைக் கொண்டுள்ளது. ஆனால் அணுகுண்டை பாகிஸ்தான் வெடித்தால், அணுஆயுதங்கள் சம்பந்தமான தனது முடிவை பாரதம் மறுபரிசீலனை செய்யும்' என்று அவர் கூறினார்.

## புதன்கிழமை இறுதிச்சடங்கு

[லண்டன்]

மவுண்ட்பேட்டன் பிரபுவின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் புதன்கிழமை 5ந் திகதி லண்டனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலயத்தில் நிகழ்ந்த கொலை!

[தஞ்சாவூர்]

தஞ்சாவூரிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஓர் ஆலயத்தில் ஆலய அர்ச்சகர் குப்புசாமி ஐயங்கார் [70 வயது] கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் உறங்கிக்கொண்டிருந்தபோது, அவரது கழுத்து நெரிக்கப்பட்டு கொலை நடத்திருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## "தமிழ்க் கொண்டல்" சொக்கலிங்கம்



சுயநலமின்றி பிறர்நலம் கருதிப் பேசும் ஆற்றல் படைத்தவர், வலிகாமம் கிழக்கு இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. வைத்திலிங்கம் சொக்கலிங்கம் அவர்கள் அரசாங்க உயர்தர உத்தியோகங்களை ஒழுங்காக வகித்த போதிலும் இவர் தமது உத்தியோகக் கடமைகளுடன் சமய தமிழ்ப் பணிகளில் ஆர்வமுடன் முன்னின்று உழைத்தமை பெரிதும் பாராட்டத்தக்கதே. அன்னார் தமது உத்தியோகத்தை சீவனோபாயத்துக்குரிய ஒரு தொழிலாகக் கருதாமல் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற உளப்பாங்குடன் சமூகசேவையாகவே கருதினார். இந்த ஆன்றமைந்த கொள்கையே அவரை சைவதமிழ் உலகில் சான்றோனாக்கியது என்றால் மிகையாகாது. எனவே அவர் "ஈத்துச் சொல்லின் செல்வர்" ஆகினார். அவர் எடுத்த சமய தமிழ் விழாக்கள் பலப்பல.

சமீபகாலத்தில் ஈழத்தின் பலபாகங்களிலும் எடுக்கப்பட்ட சமய விழாக்கள், தமிழ் விழாக்கள், மறுமலர்ச்சி விழாக்கள் பட்டிமன்றங்கள் கவியரங்குகள் எல்லாவற்றிலும் திரு. சொக்கலிங்கத்தைக் காணமுடிந்தது என்றால் அதற்கெல்லாம் காரணம் அவரது சொல் ஆற்றலே. அரசாங்கக் கடமைகளையும் குறைவின்றிச் செய்து, அதே சமயம் முத்தமிழ்ச் செல்வக் களஞ்சியங்களையும் நுணுகி ஆராய்ந்து, சிறந்த மேடைப்பேச்சாளராகத் திகழ்ந்தவர் "முத்தமிழ்க் காவலர்" என்ற பட்டம் முன்னமே அவருக்கு வழங்கப்பட்டுவிட்டது.

அன்பு, பண்பு, ஒட்டுறவு, கனிவோட்டம் வாய்மை யாதிய சால்புகள் நிறைந்த திரு. வைத்திலிங்கம் சொக்கலிங்கம் சமயத்துக்கும் சமூகத்துக்கும், மொழிக்கும் செய்த தன்னலமற்ற சேவையைப் பாராட்டி வலிகிழக்குப் பொதுமக்கள் இன்று சனிக்கிழமை எடுக்கும் பெருவிழாவில் அன்னாருக்கு "தமிழ்க் கொண்டல்" என்ற சிறப்புப் பட்டத்தினையளித்துப் பொன்னாடையும் போர்த்திக் கௌரவிக்க இருப்பது மிகவும் வரவேற்கக் கூடியதே.

—அ. பஞ்சாட்சரம்


# கட்பெறீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்



சொப்பர் சைக்கிள்



ஒவ்வொரு விடையுடனும் உள்ளேயுள்ள இந்த தகரத்தகடு அனுப்பப்பட வேண்டும்.



ரீவி செற்



சுய இயக்க றைஸ் குக்கர்






தையல் மெஷீன்

இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறீஸ் போண்விற்ற சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம், இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

விதிகள்

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனால் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்ற ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.

மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.

பரிசு இழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கொ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தபடவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளபடவோ மாட்டாது.

போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினால் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும். வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | று | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால் நான் விரும்புவது:

பெயர்: ______________

விலாசம்: ______________

திகதி ______________

இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்ற போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

S 220

# "பொருளாதார அபிவிருத்திக்கு உள்ளூர் உற்பத்தி முக்கியமானது"

(சங்கானை)

"உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தியடையச் செய்யலாம். பொருளாதார அபிவிருத்தியாலேயே தொழிலாளர்கள் நாட்டுமக்கள் நன்மையடையலாம்.

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா சங்கானை கல்பதனிடும் ஆலையில் பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்பட்ட பனம்பழ ஜாம், பனம்பழ இரசம் ஆகியவற்றை பார்வையிட்ட பின் தொழிலாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு நித்தியானந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இங்கு தயாரிக்கப்பட்ட ஜாம், இரசம் போன்றவற்றை பரீட்சார்த்தமாக மட்டும் நின்று விடாமல் பெருந்தொகையான அளவில் உற்பத்தி செய்யவேண்டும். அப்போதுதான் நாட்டுமக்களும் இத்தன்மையை அறிவதுடன் எமது ஸ்தாபனமும் மேலோங்கி தொழிலாளர்களும் பயனடைவர்.

"முன்னேற்றப்பாதையில் செல்லும் ஒரு தொழிற்சாலை ஊழியருக்கு தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கி வரும் கலால் இலாகா உத்தியோகத்தர்களும் பாராட்டிற்குரியவர்கள்.

இந்த தொழிற்சாலையில் போதிய அளவு கள் போத்தலில் அடைக்கக்கூடிய நிலை இருந்தும் பல்லாயிரம் போத்தல் கள் வெளியே ஊற்றப்படுவது வருந்தத்திற்குரியது என்றார்.

# "நியமன அங்கத்தவர்களே நிர்வாகத்தைபொறுப்பேற்று நடாத்த அனுமதிக்கவும்"

## பரு மீனவர் கூட்டுறவுச்சங்கம் கோரிக்கை

(புலோலி)

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் நியமன அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களே சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பை பெற்று நடாத்தவேண்டுமென கடற்றொழில் அமைச்சர் திரு பெஸ்டன் பெரேராவைக் கோருவதென்ற முக்கியதீர்மானமொன்று பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

'சங்கத்தில் இருப்பிலிருக்கும் உள்நாட்டுத்தயாரிப்பு மீன்பிடி உபகரணங்களை சங்க அங்கத்தவர்களுக்கு சந்தை விலையிலும் குறைந்த விலைக்கு வழங்குதல்.

'மீனவர்களுக்கு வேண்டிய எரிபொருள்களான டீசல், மண்ணெண்ணெய்,பெற்றோல் என்பனவற்றை மீனவர்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கென 'மீனவர் எரிபொருள் விற்பனை நிலையமொன்றை அமைத்தல்.

'வடமராட்சிப்பகுதி மீனவர்களின் போக்குவரத்து சீர்கேட்டை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், மீனவர்களுக்கு வேண்டிய மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

'சங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சம்பள உயர்வை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

'மீனவர்களின் நன்மைகருதி உப்பு அரைக்கும் ஆலையொன்றையும், ஐஸ் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

'சங்கத்தின் மொத்தக்கடன் எல்லையாக9?,05,000ரூபாவை நிர்ணயித்தல்.'

## சுய உதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ்

# யாழ். மாவட்டத்தில் 1377 வீடுகள் கட்டப்படும்

(வண்ணார்பண்ணை)

தேசிய வீடமைப்பு இலாகாவின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1377 வீடுகளை சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் நல்லூர் தொகுதியில் 236 வீடுகளும், பருத்தித்துறைத் தொகுதியில் 200 வீடுகளும், காங்கேசன்துறைத்தொகுதியில் 75 வீடுகளும், உடுப்பிட்டித்தொகுதியில் 105 வீடுகளும், மானிப்பாய்த் தொகுதியில் 50 வீடுகளும் ஊர்காவற்றுறைத் தொகுதியில் 134 வீடுகளும், சாவகச்சேரித்தொகுதியில் 149 வீடுகளும், கோப்பாய்த்தொகுதியில் 117 வீடுகளும், யாழ்ப்பாணத் தொகுதியில் 199 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

இத்திட்டத்தின்படி இதுவரை 120 சுயஉதவி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தொகுதியில் 136 குடும்பங்களுக்கான மாடிவீட்டுத்திட்டம் ஒன்றும், சாவகச்சேரித்தொகுதியைச் சேர்ந்த நாவற்குழிக்கிராமத்தில் மத்திய வகுப்பினருக்கான 300 வீட்டுத்திட்டம் ஒன்றும் இதனுள் அடங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் மிருசுவில் பெண்கள் குடியேற்றத்திட்டத்தில் 121 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. (கு)

# "மகோற்சவம் மேன்மையானது"

(யாழ்ப்பாணம்)

"மகோற்சவம் என்பது சிறந்த திருவிழா எனப் பொருள் பெறும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதே விழாக்கள் இவ்விழாக்களில் தலையாயது கொடியேற்றவிழா"

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் கொடியேற்ற விழாவன்று பேசிய பண்டிதர் செ. சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஆசிரியர் திரு அ. பஞ்சாட்சரம் இவ்விழாவை ஆரம்பித்துவைத்தார்.

சிவாசாரியமணி பிரமஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள் தலைமையில், பிரமஸ்ரீ ச. பரமேசுவரக்குருக்கள் கொடியேற்ற விழாக்கிரிகைகளை நடாத்தி வைத்தார். (கு)

# அண்ணா பிறந்தநாள் விழா

(யாழ்ப்பாணம்)

பேரறிஞர் அண்ணாவின் 70 வது பிறந்ததினத்தை முன்னிட்டு யாழ் (அகில இலங்கை) அ. தி. மு. கழகத்தினர் நடாத்தும் மாபெரும் விழா இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமை குருநகர் அண்ணா சிலை முன்பாக நடைபெற விருக்கின்றது.

யாழ். அ. தி. மு. கழகத் தலைவர் திரு. யே. டியூக் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கதை, கவிதை, கட்டுரை ஆகியபோட்டிகளோடு வலது குறைந்தவர்களுக்கான பல நிகழ்ச்சிகளும் மரதன் ஓட்டப்போட்டி, மெய்வல்லுநர் போட்டி என்பனவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கா-கு)

# 700 தொன் உருளைக்கிழங்கு இறக்குமதியாகும்

(நீர்வேலி)

வலிகிழக்குப் விவசாயிகளுக்கு வழங்குவதற்கென 700 தொன் விதை உருளைக்கிழங்கை மட்டுமே இறக்குமதி செய்வதென்றும் அவற்றை விற்பனை செய்யும்போது 20 வீதம் உள்நாட்டு கிழங்கும் விகிதாசாரப்படி வழங்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலிகிழக்குப்பகுதிக்கான விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரால் யாழ். செயலகத்தில் கூட்டப்பட்ட மகாநாட்டிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் காலபோகத்திற்கான கிழங்கை புத்தூர் கமநலத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுவே வழங்கவுள்ளது. (கு)

# மகோற்சவம்

(சித்தன்கேணி)

வடலியடைப்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 26ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை 2ம் திகதி வேட்டைத்திருவிழாவும் 4ம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். (கு)

# தெரிவு

(அரியாலை)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இணையான கோண்டாவில் ஸ்ரீ நாராயணன் ஐக்கிய பண்டகசாலையின் நிர்வாகக் குழுவின் தலைவராக திரு. க. கிருஷ்ணராசா ஏகமனதாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.


மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெமினி-விஜயகுமாரி
பொற்சிலை

REGAL 3rd CROWDED WEEK
(Jaffna) LAST FEW DAYS
Daily 10-30, a. m. 2-00, 4-30, 7-00 p.m, only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் தினசரி 2-30, 6-30 & 9-45.
(யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு 10-30
றிவோல்வர் ரீட்டா

லிடோ போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

4th & FINAL WEEK
SRIDHAR-Jaffna Phone: 7345
at 10-30 a m, 3-00, & 7-30 p.m.
Don't miss this great film for the last time in Jaffna
CECIL B DEMILLE'S
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Schools contact Management for Special shows.

ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
(புதிய பிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்

ராஜா தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

சாந்தி —யாழ்நகர்—போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
உங்கள் அபிமான சித்திரம் "அக்பரில்" நடித்த
திலிப்குமார் — மதுபாலா
உங்களை மீண்டும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்த
இதோ! நடிகை நிம்மியுடன் இணையும் ஹிந்திச் சித்திரம்
★ அமார் ★
விறுவிறுப்பு மிகு சண்டைகள்! இனிய பாடல்கள்!!
இசை "நௌஷாத்" — "AMAR" — Hindi—

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
காலை 10 30, பி.ப.2-00,
யாழ்ப்பாணம் மாலை 6-00, இரவு 9-30
(தென்னிந்திய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி ஆர்.
அஞ்சலிதேவி
சக்கரவர்த்தித் திருமகள்

வெல்லி
வல்வெட்டித்துறை
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எங்களில் ஒருவன்

RIO (Jaffna- TwonHall)
Phone: 7697
4th & FINAL WEEK
Daily 4 Shows
DRIVER

# இலவசஹோமியோபதிவைத்தியசாலை

# கொழும்பில்நிறுவப்படும்

## ஹோமியோபதி சபைக்கூட்டத்தில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள்

(கொழும்பு)

இலவச ஹோமியோபதி வைத்தியசாலை ஒன்று கொழும்பில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் இங்கு நடைபெற்ற ஹோமியோபதி வைத்திய சபையின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஹோமியோபதி வைத்தியசபையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு-

கொழும்பில் இலவச ஹோமியோபதி வைத்தியசாலையை ஆரம்பிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது இதனுடன் பொருத்தமான கட்டடம் கிடைத்ததும் இலங்கையில் உள்ள ஹோமியோபதி நிபுணர்களின் சேவையை மக்கள் இலவசமாகப் பெறக்கூடியதாக ஒழுங்குசெய்வது. இதனுடன் நாளடைவில் இந்திய நிபுணர்களும் வரவழைக்கப்படவேண்டும்.

ஹோமியோபதிக் கவுன்சில் பதிவு வேலையை ஆரம்பிக்கும்போது இரண்டு வட இந்திய நிபுணர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வது.

வருடந்தோறும் தகுதியுடைய 10 மாணவர்கள் இந்தியா சென்று ஹோமியோபதி கற்பதற்கு இந்திய அரசாங்கத்தின் புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொள்வது.

இலங்கையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஹோமியோபதி வைத்தியக்கல்லூரிக்கு 50 மாணவர்களைத் தெரிவுசெய்து 5 வருடங்களுக்குப் போதிப்பது

ஹோமியோபதி டாக்டர்கள் பதிவு சம்பந்தமாக விண்ணப்பப் படிவங்களை தயாரிக்கும் வேலையில் சபை உடனடியாக ஈடுபடுவது, செப்டம்பர் 4ந் திகதி நடைபெறவிருக்கும் சபைக் கூட்டத்தில் படிவங்கள் அங்கீகரிக்கப்பட்டு அச்சடிக்க ஆயத்தஞ் செய்யவேண்டும். பதிவு பெறும் வைத்தியர்களுக்கான சான்றிதழ் மாதிரியும் அடுத்த கூட்டத்தில் அங்கீகரிப்பது

### மருந்து இறக்குமதி

மருந்து இறக்குமதிசெய்வதில் தனிப்பட்ட வைத்தியர்கள் கஷ்டப்படுவதாகவும், சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, பின்வரும் தீர்மானமொன்றை இறக்குமதி ஆணையாளருக்கு அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது.

எந்தவொரு வைத்தியரின் மருந்து இறக்குமதி விண்ணப்பத்தையும் நிராகரிப்பதற்கு முன்னர் ஹோமியோபதி சபையின் ஆலோசனையைப் பெறவேண்டும்.

சபைக்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் முழு இறக்குமதியையுங் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கவுன்சில் பொறுப்பேற்குமெனவும் அதுவரை ஏற்கனவே இருந்ததுபோல இறக்குமதியை அனுமதிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

கவுன்சில் இம்மாதம் 4ந் திகதி மீண்டும் கூடும்போது பல புதிய தீர்மானங்களை மேற்கொள்ளப்படுவதுடன் பதிவுபெறும் திகதியும் அறிவிக்கப்படும். மூன்று வருடங்களுக்கு மேல் வைத்தியஞ் செய்துவருபவர்கள் மாத்திரம் பதிவுசெய்யப்படுவார்கள். 10 வருட சேவைக்குக் கூடுதலாக உள்ளவர்கள் தனி வாய்மொழிப் பரீட்சையிலும் மற்றையவர்கள் ஒரு எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த பின்னர் வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தியடையவேண்டுமென்றும் இச்சபை தீர்மானித்துள்ளது.

---

"கூட்டுறவுக்கிளை உறுப்பினர்கள்

## ஊழல்களுக்கு இடமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"கூட்டுறவு இயக்கத்தை மக்கள் கையில் ஒப்படைப்பதற்கான முறையில் கிளைக் குழுக்களின் தேர்தல் நடைபெற்றுள்ளது. இதில் அங்கத்துவம் பெறுபவர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் ஊழல்களுக்கு இடமில்லாதவகையிலும் நடந்துகொள்ளவேண்டும்."

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் பேசிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு எஸ் இராசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. ஞானப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில், "கிளை முகாமையாளர்கள் கிளைக்குழு அங்கத்தவர்களுடன் ஒத்துழைத்து சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்க வேண்டும் அரசாங்கத்தின் புதிய திட்டப்படி கிளைக்குழு அங்கத்தவர்களுக்கும் இயக்குனர் சபைக்கும் இடையே நல்லுறவு வளர்த்தக்க வகையில் ஒத்துழைப்பு நல்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து உட்பட பலர் பேசினர்.

[கொ-கு]

---

சர்வதேச சிறுவர் ஆண்டு:

## யாழ். நகரில் பாலர் பாடசாலைகள் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சிறுவர் ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம் பாலர் பாடசாலைகளை அமைக்கவும், புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுத்துவருகிறது

இத்திட்டத்திற்கு முன்னோடியாக யாழ் மாநகரசபை மேயர் திரு. இராஜா விசுவநாதனை நிறுவனத்தினர் சந்தித்து கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின்போது திரு. விசுவநாதன் யாழ். மாநகரசபைப் பிரதேசத்திற்குள் உள்ள பாலர் பாடசாலைகளின் விபரங்களைத் திரட்டித் தருவதாகவும், யாழ்ப்பாணத்தில் சிறுவர் தினத்தைக் கொண்டாடவும், பாலர் நலன் கருதி நிறுவனம் எடுக்கும் சகல முன்னேற்றங்களுக்கும் சுகாதார வசதிகளை மேற்கொள்ளவும் ஒத்துழைப்புத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

[கு]

---

## சுழிபுரத்தில்இன்றுஎன்.எம். அஞ்சலிக்கூட்டம்

### கெல்வின், அமிர் உரையாற்றுவர்

[சுழிபுரம்]

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் அமரர் கலாநிதி என். எம். பெரேராவின் நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறுகிறது.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, பேர்னாட் சொய்ஸா, எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை எம். பி திரு தா திருநாவுக்கரசு, கே. பி. டி சில்வா, திரு. அ வைத்திலிங்கம் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

வட்டுக்கோட்டைத்தொகுதி லங்கா சமசமாஜக் கட்சிக்கிளையினரால் இவ்வஞ்சலிக் கூட்டம் நடத்தப்படுகிறது

[கு]

---

## இன்று

[புலோலி]

குருக்கட்டி சனசமூக நிலையத்தினதும் கிராம முன்னேற்றச் சங்கத்தினதும் 31 வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று நடைபெறுகிறது

விளையாட்டுப் போட்டி திரு. இரா. தபேந்திரன் தலைமையிலும், ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் திரு க. இராசையா தலைமையிலும் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு சிவசிதம்பரம். பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

[ச]

0 0 0

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் நாட்டியாலயாவினரின் 7 வது வருடாந்த கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

[கு]

0 0 0

[பண்டத்தரிப்பு]

சுருவில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 7 வது ஆண்டு விழாவும், விளையாட்டுப்போட்டியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் சுருவில் கவுணாவத்தை வைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது

---

## துரைரத்தினம் மட்டுமே வந்தார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டமிடல் கருத்தரங்கில் பருத்தித்துறை எம். பி கே. துரைரத்தினம் மட்டுமே கலந்துகொண்டு கருத்து வெளியிட்டார்.

இதே வேளையில் ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கருத்தரங்கில் கலந்துகொள்ள யாழ்ப்பாண செயலகத்திற்கு வந்தாராயினும் அதில் கலந்துகொள்ளவில்லை. கருத்தரங்குக்கு யாழ் மாவட்ட அமைச்சர் இல்லாத காரணத்தினாலேயே தாம் அதில் பங்குபற்றவில்லை என்று பண்டிதர் நமது நிருபரிடம் கூறினார்.

[செ]

---

## வடமாகாண சாம்பியன்

[அரியாலை]

அகில இலங்கை கல்லூரிகளின் கிரிக்கட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட 1978ம் ஆண்டு கிரிக்கட் போட்டியில் வடமாகாணப் பகுதிச் சம்பியனாக யாழ் பரி யோவான் கல்லூரி 16 வயதுக்குட்பட்டோர் கோஷ்டி தெரிவு செய்யப்பட்டது.

இதற்கான வெற்றிக்கிண்ணத்தை இக்கோஷ்டியின் தலைவரான செல்வன் இரத்னராசா பெற்றுக்கொண்டார்.

அகில இலங்கையிலும் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கட் போட்டிகளில் சிறந்த விக்கட் கீப்பராக' யாழ் பரி யோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் அரிச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார். இவரது சாதனையைப் பாராட்டி இவருக்குக் வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

## யூனியன் வெற்றி

[அரியாலை]

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் பரி யோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஹொக்கிப் போட்டியில். யூனியன் கல்லூரி 4-0 கோல்களால் வெற்றியீட்டியது.

17 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில், 2 - 1 கோல்களால் யூனியன் கல்லூரிக் கோஷ்டி வெற்றியீட்டியது. மேற்படி இரு போட்டிகளும் யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

---

[வேலணை]

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு பொ தியாகராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் பொ தியாகராசா, உபதலைவர் செ. தவசிலுபங், செயலாளர் செ. திருநாவுக்கரசு. உபசெயலாளர் செ புண்ணியமூர்த்தி, தனாதிகாரி திருமதி வ நடராசா [ஆசிரியை] மற்றும் 4பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும தெரிவு செய்யப்பட்டது

(கு)

---

# யாழ். மாவட்டத்தில் மூன்று பாரிய திட்டங்கள்

### விரைவில் அமுலாகும் என்கிறார் "யோகேந்திரா"

[யாழ்ப்பாணம்]

"யாழ் மாவட்டத்தில் மூன்று பாரிய திட்டங்களை அமுல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒன்று முழுமிகாவிலில் அமையும் படித்த வாலிபர்களுக்கான விவசாயத் திட்டம். அடுத்தது பருத்தித்துறையில் அமையும் கண்ணாடித் தொழிற்சாலை, மூன்றாவது யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள பாரிய ஐஸ் உற்பத்தி நிலையம் இதற்கான மூலதனங்களுக்கு திட்டமிடுதலே எமது கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திர துரைசுவாமி நேற்றுக்காலை யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டமிடல் கருத்தரங்கை யாழ். செயலகமண்டபத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "இன்று இங்கு நடைபெறும் கருத்தரங்கு குறிப்பாக யாழ். மாவட்டத்திற்கும் நல்ல பயனைக் கொடுக்கும். இதன்மூலம் எமது மாவட்டத்தின் அபிவிருத்தியை திட்டமிட்டு அமுல் செய்ய முடியும். இதனைச் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள ஏதுவாகும். இத்தகைய திட்டமிடல் மூலமாக ஏற்படுகின்ற பொருளாதார மறுமலர்ச்சியிலேதான் சுதந்திரமான சமத்துவமுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்" என்றார்.

பருத்தித்துறை எம் பி திரு. கே துரைரத்தினம் உரையாற்றுகையில் அபிவிருத்தியை சிறந்த முறையில் திட்டமிட்டு விரைவாக செயல்படுத்த வேண்டுமெனத்தாம் கோருவதாகக் கூறினார்.

நிர்வாகப் பயிற்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். சிவானந்தன் கருத்தரங்கின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார்.

ஆவ்வரங்கில் இலங்கை சனிக்கூட்டுத்தாபன உயர் அதிகாரி திரு. கே. பொன்னம்பலம் உட்பட, உள்ளூர் பிராந்தியத் தலைவர்களும் கருத்துரைகளை வழங்கினார்கள், கருத்தரங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

(செ-இ)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டுமாதம் செப்டம்பர் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49, Telegeram Eelanadu; T.Phon: 389.